"அதேகிருதுத்தவம் ப்ரகாரகா ஞானஜன்யஹ ஆத்மனஹ ப்ரயத்தனவம் ப்ரதிஹேது இச்சா". இச்சா விருப்பம் என்பது பொருள் விருப்பங்களை நிவர்த்தி பண்ணிக்கொள்ளலாம். நல்ல தீர்த்தமாடுதல், விரும்பும் புத்தகத்தை படித்தல், தொடர் வண்டியில் சென்று குற்றாலத்தில் குளித்தல் என்பதும் விருப்பம். சர்க்கரைப்பொங்கல் சாப்பிடுதல் விருப்பம், பெருமாளுக்கு புஷ்ப கைங்கர்யம் செய்தல் விருப்பம், சின்ன சின்னதாக எது நல்லது நடக்கணும் நினைக்கிறோமோ சுகமாக இருக்கிறதோ அதுபூராவும் விருப்பம் தான். அதேசமயம் நமக்கு அது அனுகூலமா இருந்து சுகமா இருக்கு அதுவே துக்கமா மாறுகிறது. ஊருக்கு போகணும் நினைக்கிறோம் திடீர்னு காலில் அடிபட்டு ரத்தம் வருகிறது, ஊருக்கு போகமுடியாமல் போகிற சந்தர்ப்ப சூழ்நிலை வரும் போது மீதி பேர் செல்லுங்கள் என்காலில் ரத்தம் வருகிறது. மற்றவர்கள் உடையை மாற்றிக்கொண்டு கிளம்பும் போது துக்கம் வரும், நான் ஆசைப்பட்டது நடக்கவில்லை பெருமாள் தான் சோதிச்சுட்டார்னு சொல்லுவா. இதுவும் ஒரு விதமான துக்கம். சுகமும் துக்கமும் நம்ம சரீரத்தில் தான் இருக்கு. "சுகம் துக்க உபலபி சாதனம் இந்திரியம் மனஹ". "சுகாதி பலப்பய சாதனம் இந்திரியம் உபநலபி சாதனம்". சுகமும் துக்கமும் உபநலப்யேவ சுகத்தையும் துக்கத்தையும் அனுபவித்தலுக்கு பேர் தான் மனசு என்று பெயர். மனம் தான் இரண்டையும் அனுபவிக்கிறது. அதுவும் சுகத்தை ஒட்டியே அனுப்பித்தல் முடியாது. துக்கமும் அனுப்பித்து தான் ஆகவேண்டும். 18 வருடம் வ்யாதி இல்லாமல் இருந்து திடீரென்று வியாதி வந்துவிட்டது அந்த வியாதி வந்துட்டா போகாது தொடர்ந்து தான் வரும். அதனால் "இச்சா காமஹ" விலக்ஷ்ணா அபேக்ஷித்தத்துவ ப்ராகாரக ஞானஜன்யாக ஆத்மன: ப்ரயத்துணம்ப்ரதி ஹேது: இச்சா அதுக்கு உதாரண க்ரமம் ஜானாதி இச்சதி ப்ரேததே இதி க்ரமஹ.

க்ரோதோ த்வேஷ: க்ரோதம் என்றால் த்வேஷம் என்று பெயர். ஒரு வெருப்பு த்வேஷத்தோடு இருப்பவன் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஒருவரை பிடிக்கவில்லை என்றால் தப்பு செய்யாதவனை தப்பு செய்தவன் என்று சொல்லுவான். தப்பு செய்யாதவன் வேண்டாதவனாக இருப்பான். அவன் மேல் பழி சொல்லி தப்பிப்பான். இது தான் க்ரோதஹ த்வேஷஹ. இது சுக துக்கத்தில் வராது, இச்சாவிலும் வராது. த்வேஷம் தான் வெருப்பு எனப்படும். நல்லவனாகத்தான் இருப்பான். ஆனால் அனுகூலமாக மற்றவனுக்கு இல்லாததால் த்வேஷிப்பான் அதாவது வெறுத்தல். நல்லா படிடா படிச்சுட்டு நல்லா பெரியாளாக ஆகுடா அவனை இவன் த்வேஷிப்பான் உடனே வெறுப்பான். உடனே படியென்று சொல்லக்கூடாது ஜாலியாக விளையாடணும். நல்லா தொலைக்காட்சி பார்க்கணும் என்று சொன்னால் குழந்தைகளுக்கு சந்தோஷம் வரும். படியென்றால் துக்கம் வந்துடும். பாட வகுப்புக்கு நான்கு பேரில் மூன்றுபேர்கள் வந்துவிட்டால் சந்தோஷம் வந்துவிடும். மூன்றுபேரில் ஒருவர் மட்டும் வகுப்புக்கு சென்றால் எங்களை கேட்காமல் ஏன் சென்றாய் வாத்தியார் நீ நல்லவன் என்று சொல்லிவிட்டு எங்களை கெட்டவன் என்று சொல்லுவார் இதான் அவன் மீது மற்றவர்களுக்கு த்வேஷம் வந்துவிடும். அவன் மேல் சண்டை அவன் இவர்களை படிக்க விடாமல் பண்ணுவான் இயற்கையாக நடந்துவிடும். த்வேஷம் என்பது

ஒரு குணம் மற்ற குணத்தில் இதுவும் ஒன்று வெறுப்பு. இந்த குணம் நல்லவனை ஏற்றுக் கொள்ளாது. கெடுதல் சொல்பவன் நண்பனாகி விட்டால் அவன் சொல்வது தான் சரியாக தோன்றும். இங்கு சுகம் துக்கம் என்பதில் சுகத்தின் முடிவு துக்கம், துக்கத்தின் முடிவு சுகம். ஆனால் வெறுப்பினுடைய குணம் என்பது பிடிக்காததத்தன்மை தான் சொல்லுவதைத்தான் த்வேஷமாக சொல்லும். உதாரணமாக அண்ணா தம்பியினிடத்தில் த்வேஷம் வரும். எலிக்கு பூனையிடத்தில் த்வேஷம் வரும். புலிக்கு மானிடத்தில் த்வேஷம் வரும். அவன் பெயர் சொல்வதே த்வேஷம் வருகிறது என்பான் வயிறெல்லாம் பத்திண்டு எரிகிறது என்பான், அதனால் அவன் பெயரை சொல்லக்கூடாது என்பான். இது தான் வெறுப்பு அல்லது த்வேஷம். இச்சாயஹ ப்ரதிகாதே கோபஹ: ததோ த்வேஷ இதிக்ரமஹ: ப்ரதி கூலத்துவ ஞானஜன்ய ஆத்மகுணோ த்வேஷ: த்வேஷம் என்றால் ப்ரதி கூலத்துவ ஞானஜன்ய ஆத்மகுணோ த்வேஷ: இது ப்ரதி கூலம் அடையாமல் அதாவது அனுகூலமில்லாமல் ப்ரக்ருதி சம்பந்தத்தால் ஏற்பட்டு ஆத்மா இப்படி அனுபவிக்கிறது.